# யூன் – 03 - சனி

**புனித சாள்ஸ் லவங்கா**

**“ஆண்டவர் தம் தூய கோவிலில் இருக்கின்றார்” – தி.பா 11:4**

## முதல் வாசகம்: திருத்தூதர் பணி 28 :16–20, 30–31

அக்காலத்தில் உரோமைக்கு வந்தபோது பவுல் தனி வீட்டில் தங்கியிருக்க அனுமதி பெற்றுக் கொண்டார். ஆனால் படைவீரர் ஒருவர் அவரைக் காவல் காத்து வந்தார். மூன்று நாள்களுக்குப் பின்பு பவுல் யூத முதன்மைக் குடிமக்களைத் தம்மிடம் வரவழைத்தார். அவர்கள் வந்து கூடியபின் அவர்களை நோக்கி, ”சகோதரரே, நான் நம்முடைய மக்களுக்கு எதிராகவோ, மூதாதையரின் மரபுகளுக்கு எதிராகவோ எதுவும் செய்யவில்லை. எனினும் எருசலேமில் நான் கைது செய்யப்பட்டு உரோமையரிடம் ஒப்புவிக்கப்பட்டேன். அவர்கள் என்னை விசாரித்தபோது மரண தண்டனைக்குரிய குற்றம் எதுவும் என்னிடம் காணாததால் என்னை விடுதலை செய்ய விரும்பினார்கள். யூதர்கள் அதனை எதிர்த்துப் பேசியபோது நான், ”சீசரே என்னை விசாரிக்க வேண்டும்” என்று கேட்கவேண்டிய கட்டாயத்துக்குள்ளானேன். ஆனால் என் இனத்தவர்க்கு எதிரான குற்றச்சாட்டு எதுவும் என்னிடமில்லை. இதனால்தான் நான் உங்களைக் கண்டு பேசுவதற்காக அழைத்தேன். இஸ்ரயேல் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையின் பொருட்டு நான் விலங்கிடப்பட்டுள்ளேன்” என்றார். பவுல் அங்கு இரண்டு ஆண்டுகள் முழுவதும் தாம் வாடகைக்கு எடுத்த வீட்டில் தங்கியிருந்தார். தம்மிடம் வந்த அனைவரையும் வரவேற்று, இறையாட்சியைக் குறித்துப் பறைசாற்றி வந்தார். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப் பற்றி முழுத் துணிவோடு தடையேதுமின்றிக் கற்பித்துக் கொண்டிருந்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே நேர்மையாளர் உமது முகத்தைக் காண்பார்கள்

## நற்செய்தி : யோவான் 21 : 20 – 25

அப்போது, பேதுரு திரும்பிப் பார்த்தபோது இயேசுவின் அன்புச் சீடரும் பின்தொடர்கிறார் என்று கண்டார். இவரே இரவு உணவின்போது இயேசுவின் அருகில் அவர் மார்பு பக்கமாய்ச் சாய்ந்து கொண்டு, ”ஆண்டவரே உம்மைக் காட்டிக் கொடுப்பவன் எவன்? என்று கேட்டவர். அவரைக் கண்ட பேதுரு இயேசுவிடம், ”ஆண்டவரே இவருக்கு என்ன ஆகும்?” என்ற கேட்டார். இயேசு அவரிடம், ”நான் வரும்வரை இவன் இருக்க வேண்டும் என நான் விரும்பினால் உனக்கு என்ன? நீ என்னைப் பின்தொடர்ந்து வா” என்றார். ஆகையால் அந்தச் சீடர் இறக்க மாட்டார் என்னும் பேச்சு சகோதரர் சகோதரிகளிடையே பரவியது. ஆனால் இவர் இறக்க மாட்டார் என இயேசு கூறவில்லை. மாறாக, ”நான் வரும்வரை இவன் இருக்க வேண்டும் என நான் விரும்பினால், உனக்கு என்ன?” என்றுதான் கூறினார். இந்தச் சீடரே இவற்றிற்குச் சாட்சி. இவரே இவற்றை எழுதி வைத்தவர். இவரது சான்று உண்மையானது என நமக்குத் தெரியும். இயேசு செய்தவை வேறு பலவும் உண்டு. அவற்றை ஒவ்வொன்றாக எழுதினால், எழுதப்படும் நூல்களை உலகமே கொள்ளாது எனக் கருதுகிறேன்.

**தியானம்:** கடவுள் நமக்குத் தந்த கொடைகளை மற்றவர்களோடு போட்டி போடுவதற்காக நாம் பயன்படுத்தக்கூடாது. மாறாக, இறையரசை இந்த மண்ணில் கொண்டு வருவதற்காக நாம் பயன்படுத்த வேண்டும். திருத்தூதர்கள் அனைவருமே இயேசுவுக்குச் சான்று பகர்ந்து நற்செய்தியின்படி தங்கள் வாழ்வை அமைத்தவர்கள். ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் கடவுள் தங்களுக்கு கொடுத்த கொடைகளுக்கு ஏற்ப நற்செய்தியைப் பறைசாற்றினர். இதில் யார் சிறந்தவர்? என்பதல்ல மாறாக அனைவருமே சிறந்தவர்கள்தான். அனைவருமே நற்செய்தியைப் போதித்தவர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களது இயல்பில் நிறைவாகச் செய்தார்கள் என்பதனை நற்செய்தி தெரிவிக்கின்றது. இயேசு எல்லாம் வல்ல கடவுளை எமக்கு வெளிப்படுத்தி கடவுள் காட்டுகின்ற எல்லையற்ற அன்பின் வெளிப்பாடாக எமக்காகத் தம் உயிரையே கையளித்தார். இவ்வுலக சக்திகள் இயேசுவைக் கொன்றுவிட்டது போலத் தோன்றினாலும் உண்மையிலேயே இயேசுவின் சாவு நம் வாழ்வுக்கு வழியாயிற்று. இறந்த இயேசுவைக் கடவுள் மீண்டும் உயிர்பெற்றெழச் செய்தார். உயிர்த்தெழுந்த இயேசு நம்மோடு தொடர்ந்து வாழ்கின்றார். இந்த இயேசுவைப் பற்றி அனைத்தையும் எழுதப்போனால் “உலகமே கொள்ளாது“ (யோவான் 21:25) என கூறுவதில் அடங்கியுள்ள உண்மையை இங்கே காண்கிறோம். அதாவது இயேசுவைப்பற்றி நாம் முழுமையாக அறிந்துவிட்டோம் என யாரும் கூற இயலாது. ஏனென்றால் அவரை அறிவது கடவுளை அறிவதற்கு இணையானது. ஆனால் கடவுளோ மனித அறிவைக் கடந்தவர். அவரை முழுமையாகப் புரிந்துகொள்ளும் சக்தி எல்லைக்கு உட்பட்ட மனித அறிவுக்கு இல்லை. எனவே, தோண்டத் தோண்ட ஊற்றெடுக்கின்ற நீரைப் போல நம் இதயத்தில் இயேசு பற்றிய அறிவு வளர வேண்டும் அவர்மேல் நாம் கொண்டுள்ள நம்பிக்கை தழைக்க வேண்டும்.